அர்

ALABHASKARANI 'Tamil Daily'




வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம் 1915ம் ஆ௵ ஆகஸ்ட் மீ 16-ந் உ திங்கட்கிழமை காலை!

பத்திரக்கிரயம்.

| | | | |
|---|---|---|---|
| ருமாசத்துக்கு | சதம். | | 50 |
| மாசத்துக்கு | ... ... | I | 25 |
| ,, | ... ... | 2 | 25 |
| ருவருஷத்துக்கு | ... ... | 4 | 00 |
| தபாலிலனுப்ப | | | |
| ருமாசத்துக்கு | ... ... | I | 00 |
| ,, | ... ... | 2 | 75 |
| ,, | ... ... | 5 | 25 |
| ருவருஷத்துக்கு | ... ... | 10 | 00 |
| வாரமொருமுறை வெள்ளிக்கிழமைகளில் அனுப்ப | | | |
| மாசம் | சதம். | | 60 |
| ஷை 3 | | 1 | 80 |
| ,, 6 மாசத்துக்கு. | | 3 | 62 |
| ருவருஷத்துக்கு | ... | 7 | 25 |
| சமொருமுறை | | | 50 |

தனிப்பிரதிசதம் இரண்டு
இந்தியாவுக்கு காலணா.

---

எமது பத்திரிகையைச் சாதிபேதம் சமயபேதம் மத பேதம் பாராது ஈசம் நடத்துவதால் நமக்குத் தமிழ் பேசு வர்களெல்லாம் ஆதரிப்பதாக வாக்குக்கொடுத்திருக்கிறார் கள். பிறவிடங்களிலே உத்தியோகத்தில் அமர்ந்திருக் கும் யாழ்ப்பாணத்தவர்களும் நகரத்துச் செட்டிப்பின் ளைகளும், வியாபாரிகளும் உத்தியோகஸ்தர்களுமான மக மதியர்களும் ஆதரித்துவருவதாகவும் தமது வியாபார விளம்பரம் முதலானவைகளை இதிலே பிரசுரிப்பதாகவும் தமது அபிப்பிராயங்களையும் விசேஷ புதினங்களையும் கா லத்துக்குக் காலம் எமது பத்திரிகைவாயிலாகத் தெரிவிப் பதாகவும் வாக்களித்திருக்கிறார்கள். பரோபகாரமான சகல விஷயங்களும் பிரசுரிக்கப்படும். சாஸ்திர சம்பந் தமான விஷயங்களும் மனோசாஸ்திர வசியசாஸ்திர விஷ யங்களும் கல்வியோடடுத்த சகல விஷயங்களும் இதில் அடங்கும்,

## *An Appeal.*

*Our representative approaches you with an issue of our paper as it is a Tamil Daily and you a Tamil Gentleman. We hope that you have some one who reads Tamil in your family or establishment. You may not feel inclined to read owing to your having neglected the language or this paper may not contain the information an English Daily gives. Yet, as this is a new undertaking we beg of you to encourage by paying one month's subscription in advance which will be considered a loan and returned in case we discontinue it within a month.*

# பாலபாஸ்கரன்

எம்மிறைபரியிலேறு காளிதோவென்று பார்க்குஞ்
செம்மலர் மடவாளிட்ட திலக சிந்தூரம்போல
வம்மலை மிசையே வைகி யாடகக் கிரிகும்போந்து
மைம்மிகு கடன்மேல் வந்து முளைத்தது வாலபானு.

## விண்ணப்பம்.

நாங்கள் தமிழ்பேசுபவராதலால் நம்மவர் ஒருவர் தமக்கு எமதுபத்திரிகையைக் கொண்டுவருகிறார். இலங்கை முழுதுக்கும் இது ஒரே தினசரிப் பத்திரிகையாதலாலும் சாதாரண சனங்களுக்கு உபயோகப்படக்கூடியதாதலாலும் எமமைத் தயிரியப்படுத்துவதற்காக தம்மை, எமதுபத்திரிகையை ஒரு மாசத்திற்கு எடுத்து வாசிக்கும்படியும் அந்தமாசத்துக்கு உரிய கிரயத்தை முற்பணமாகக் கொடுக்கும்படியும் தாழ்மையாகவும் மன்றாட்டத்தோடும் கேட்டுக்கொள்ளுகிறோம். அந்தப்பணந் தம்மிடமிருந்து கடனாகவாங்கியதாக இருக்கும். அந்தமாசமுடிவில் நமது பத்திரிகை ஒழுங்காக நடைபெறாவிட்டால் கொடுத்தபணத்தை திருப்பி நாமேதமது கையில் சேர்ச்செய்வேம்.

மனேஜர்

பாலபாஸ்கரன்.

---

# பாலபாஸ்கரன்.

வண்ணார்பண்ணை, ஆகஸ்டு மீ 16 உ.

---

சில காலங்களின் முன் கொழும்புக்குச் சமீபத்தில் "ராசகிரி" என்னும் இடத்திலுள்ள ஓர் நெசவு கைத்தொழில் பயிற்றும்சாலையை நமது பத்திராதிபர் போய்ப் பார்த்தார், அப்போது அவருக்கு அழுக்காறுண்டாயிருந்தால் அதுமன்னிக்கக்கூடியதே, (யாழ்ப்பாணத்தார் நெசவு கைத்தொழிலை மிகத்திருத்தலாம்) ராசகிரியிலே இரண்டு நெசவு தொழில் பயின்ற உபாத்தியாயர்கள் (ஜப்பானிலே கைதேர்ந்தவர்கள்) ஓர் தொகைமாணவருக்கு நெசவு பயிற்றினார்கள், அவர்கள்செய்யும் துணிகள் கள்ளிக்கோட்டை கன்னநூர்த் துணிகளில் விசேஷமானவை. அப்போது பத்திராதிபர் முதலுபாத்தியாயரைப் பார்த்து என்னலட்சணம பொருந்தியவர்களை மாணவராகத் தெரிந்து கொள்ளலாமென்றுவினவினர், அதற்குச் சிங்களப் பாஷை 7-ம் வகுப்புப் பாஸபண்ணவேண்டும் என்றபோது மிகத் துக்கமடைந்தார். அப்போ உபாத்தியாயர் உமக்கிஷ்டமாயின் சேர்த்து கொள்ளலாமென்றனர். வைத்திய நியாயப் பிரமாணத்தால எவ்வளவு சம்பாதிக்கக் கூடுமோ அப்படியே நெசவுத்தொழிலாலும் சம்பாதிக்கலாம்.

(கைத்தொழில் இழிவென்று அனேகர் நினைக்கிறார்கள், சுயாதீனமாக விருப்பது இழிவானால் கைத்தொழிலும் இழிவே)

வேறு வேலையொன்றுமின்றித் தமக்குச் சமயபத்தியுந்தெய்வ வழிபாடும் மாத்திர முரித்தென்று பாசாங்கு செய்து திரிபவர்களுக்கு யாம உதவக்கூடாது, அப்படிப்பட்டவர்களுள் [illegible]த்தி ஆக்கமெத்தப் பொது சனங்களுக்கு கல்வி ஊட்ட எத்தனிக்கும் அவர்களை ஆதரிக்கலாம். இவர்கள் நமது இந்துக்கள் அதிகம பெருக்கிக் கொள்ளுகிறார்கள். இவர்கள் மூன்று பாகமாகப் பிரித்துச் சோம்பலுள்ளவரைச் சாதாரண வேலைகட்கும் சமயபத்தியும் சத்துவ குணமும் பதிபுண்ணியம் விசேஷமென்ற எண்ணமுடையோரை பூசைகள் முதலிய செய்யவும்! பசுபுண்ணியமே பதிபுண்ணியமென்னும் ராசதத்தில் சத்துவ குணமுள்ளவர்களை பிரசங்கிகளாகவும் உபயோகிக்க வேண்டும். நம்மவர்கள் தலைவரி விட்டுவரி என்றால் கொடுக்கமாட்டார்கள் சோம்பலுள்ள பிராமணர்கள் பண்டாரங்களுக்கென்றால் உளைப்பிலொருபாகம் சந்தோஷமாக வுதவுவார்கள்.

தற்காலத்திலுள்ள தலைபடைத்திருக்கும் தேசங்களிலெல்லாம் ஆசாரசீர்திருத்தங்கள் இளையவர்களாலே நடத்தப்படுகின்றது ஆதலால் நமது வாலிபர்களும் "இது என்ன மடைமை" என்னிலும்பார்க்க விவேகம குறைந்தவர்களென்று பூரணமாக அறிந்தும் அவர்களோடு நான் கவலையீனமாகக் கூடி இறங்கலாமா என் மூளையும் என் இருதயமும், என் உணர்ச்சியுமெங்கே? இந்தக் கேவல சனங்களை நான் பின்பற்றுவதா? எனக்கு எங்கே இறக்கை இருக்கிறதென்று தடவிப் பார்ப்போம், பார்த்து நான் எங்கே பறக்கலாம் (என்னவேலை செய்யலாம்) என்று சொல்லிக் கொண்டு நமது தேசத்திற்கு உயிர் கொடுக்க வேண்டும்.

தேசபக்தியோ நமக்குக் குறைகிறது! நமது ஒழுக்கமோ அப்படியே, நமது மனோபலமோ சூனியம் தேகமே பலனற்றது, வேலையோ அதிகமிருக்கின்றது நமது செல்வநிலையோ பரிதாபத்திற் கிடமாகவிருக்கிறது நமக்கோ சொந்தமான தொழிலொன்றுமில்லை அதனால் தரித்திர மதிகப்பட்டுக் கொண்டது கிளான்பாளோ என்பவர் பின் வருமாறு இந்தியாவைப் பற்றிச் சொல்லுகிறார்.

## சாஸ்திர ஆராச்சி-

### காந்திக சாஸ்திரம்.

(முகவுரை)

---

இக்காலத்தில் நாம் அதிக நாகரிகநிலையை அடைந்திருக்கிறோம். நமது சகாயத்திற்கு தேவையான கருவிகளெல்லாம் மிகுந்த திருத்தத்தோடு ஏற்படுத்தப்படுகின்றன. அநேக மாதங்களை செலவுசெய்து பிரயாணம் பண்ணவேண்டிய தூரங்களெல்லாம் சொல்பநாட்களிலே தாண்டக்கூடிய வசதிகளேற்படுத்தப்பட்டிருக்கின்றன. நமது சகோதரர்களுக்கு நமது க்ஷேமாதிக்ஷேமங்களை தெரிவிக்கவேண்டுமென்றால் சில நிமிஷங்களுக்குள்ளே அறிவிக்கக்கூடிய வசதிகளே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

அப்படி எல்லாம் இருந்தும் மனுஷன் தமோற்றமுள்ளவனாகவும் தனது முயற்சியிலே அனுகூலமுண்டாகுமோவென்ற ஐயமுள்ளவனாகவும், தனது பொருளைச் செலவு செய்தால் திரும்பச் சம்பாதிக்க முடியுமோவென்ற அச்சத்தினால் வியாபாராதிகளை முதலிட்டுநடத்த அச்சமுள்ளவனாகவும் இருக்கிறான். ஆதலால் நாம் ஆராய்ந்த சாஸ்திரங்களெல்லாவற்றிலும் பார்க்க இன்னுமோர் விசேஷமான சாஸ்திர

# பாலபாஸ்கரன்

தின் அறிவுகளுக்கு வேண்டியதாக இருக்கிறதென்பது நமக்கு வெளிப்படையாகின்றது. அந்தச் சாஸ்திரத்தையே நாம் காந்திக சாஸ்திரமென்று கூறுவது:—இதை ஏன் நாம் காந்திசாஸ்திரமென்று சொல்லவேண்டியதென்று ஆலோசிப்போம்.

காந்தமானது ஓர் ஊசியை தன் சமீபத்திற்கு இழுக்கின்றது. இதை நாம் பலமுறையும் பார்த்திருக்கிறோம் ஆனால் இதற்கு விஷயம் என்னவென்று நமக்கு தெரியாது அதுபோலவே ஒரு மனிதன் பலராலும் விரும்பப்படுகிறான் நாம் அறிந்த அளவில் அவன் கல்வி செல்வமில்லாதவனாயிருக்கிறான். கல்வி செல்வ முதலியவற்றோடு கூடிய ஒருவனை பலரும் வெறுக்கிறார்கள். இவைகளை ஆலோசித்தால் வெறுக்கப்படுபவன் காந்திகமில்லாதவனாகவும் விரும்பப்படுபவன் காந்தசக்தியுள்ளவனாகவும் இருக்கிறான் என்பதை பெரியோர்கள் ஆராய்ந்திருக்கிறார்கள்.

நமது தேகத்திலே இருந்து சில அங்குல தூரத்திற்கு இந்தக் காந்திகமென்னும் வஸ்து பரந்திருக்கிறது. சுகதேகியினுடைய காந்திகம் சுத்தமானதாகவும் நோயாளியினுடைய தேகத்திலிருந்து பரந்திருப்பது அசுத்தமானதாகவும் இருக்கிறது. ஒருவர் இறந்துவிட்டால் அந்தத்தேகத்திலே காந்தசக்தியிருக்காது காந்தமில்லாத தன்மையால்தான் ஒருவன் இறக்கிறான்.

நல்ல சந்தான விருத்தி ஜனவசீகர, ராஜவசீகர, ஸ்திரிவசீகரங்களெல்லாம் காந்தசக்தியுடையவனுக்கே உரியன. பொருளில்லாமல் வியாபாரம் பல சிறந்த உயர்ந்த உத்தியோகத்தை விரும்புவோனாயினும் காந்தசக்தியுடைமையாலே அநுகூலத்தை அடைகிறான். ஏனெனில் அதிக பொருளோடு வியாபாரங்களை நடத்துபவன் சிலவேளை நஷ்டமடைவதையும் பொருளில்லாமல் வியாபாரத்தை செய்பவன் செல்வனாவதையும் நாம் பார்த்திருக்கிறோம். கல்விமான் எஜமானனாலே வெறுக்கப்படுவதையும். கல்வி குறைந்தவன் எஜமானின் பூர்ண கிருபை அடைவதையும் நாம் பார்க்கிறோம், இவைகளெல்லாம் காந்திகத்தின் சக்தியே.

இந்தசாஸ்திரமானது பூர்வ இந்தியர்களுக்கு நன்றாக தெரிந்திருந்தது. இந்தக் காந்திகத்தைப் பிரமதேஜஸ் என்றும், வசீகரமென்றும், பலவகையாக சொல்லி வந்தார்கள் மகமதியர்களும் அதிகமாக இந்த சாஸ்திரத்தில் விர்த்தியடைந்ததாகத்தெரிகிறது. "மெஸ்மர்" என்றுமோர் ஐரோப்பிய பண்டிதர் இந்தச்சாஸ்திரத்தை விர்த்திக்குக் கொண்டுவந்தால் "மெஸ்மரிஸம்" என்றும் "பிறைட்" என்றுமோர் பண்டிதர் நித்திரையென்று பொருள்படக்கூடிய "ஹிப்னஸ்" என்னும் பதத்தை உபயோகித்ததால் "ஹிப்னாடிசம்" என்றும் வழங்கப்பட்டு வருகின்றது. இந்த இரண்டிற்கும் சொற்பவித்தியாசமுமுண்டு. அவைகளை நாம் பின்னால் காட்டுவோம்.

வரும்.

---

## வர்த்தமானம்.

### யுத்தம்.

---

ஜெர்மனியில் தோல்பஞ்சம்:—ஜெர்மனியில் சகல சாமான்களும் பஞ்சமாய் விட்டன வென்று யுத்தம் தொடங்கியகால முதல் பிரஸ்தாபம் ஏற்பட்டு வருகின்றது அங்கே தோல் கிடைப்பது அருமையாய் விட்டதாம் அதனால் பள்ளிக் கூடத்துப பிள்ளைகளை யெல்லாம் மரத்தால் செய்த பாதரட்சைகளைப் போட்டுக் கொள்ளும்படி செய்ய வேண்டுமென்று அப்பிள்ளைகளின் பெற்றோர்களுக்கு கல்வியிலாக்கா அதிகாரிகள் கடிதம் எழுதி வேண்டிக் கொள்ளுகிறார்கள்.

கால்வாய்ப் பீரங்கிகள்:—ஜெர்மனியர் சுமார் 25-மயில் தூரம் கடக்கக் கூடிய பிரமாண்டமான பீரங்கிகளைக் கண்டுபிடித்திருக்கின்றன ரென்று தெரிகின்றது இவ்வளவு பிரமாண்டமான பீரங்கிகளை செர்மனியர் கண்டுபிடித்திருக்கின்றாரென்பது இதுவரை எந்த ராஜாங்கத்தாருக்கும் தெரியாது சில மாதங்களுக்கு முன் செர்மனியர் இந்தப் பீரங்கிகளைக் கொண்டு சுட்டபொழுது அது இருக்கும் இடந் தெரியாமல் குண்டுகள் அகஸ்மாத்தாய் வருகின்றனவே யென்று ஆச்சரியமடைந்து கொண்டிருந்தனர் பின் காலக்கிரமத்தில் செர்மனியர் இவ்வளவு பிரமாண்டமான பீரங்கிகளைச் செய்திருக்கின்றன ரென்று தெரிய வந்தது பிரமாண்டமான குண்டுகளை 25-மயில் தூரம் சுடக்கூடிய இந்த ராட்சதப் பீரங்கிகளுக்கு செர்மனியர் கால்வாய்ப் பீரங்கிகளென்று பெயரிட்டிருக்கின்றனர் கலேயில வைத்துக் கொண்டு இங்கிலீஷ் கால்வாயின் குறுக்காக இங்கிலாந்தைத் தாக்கக் கூடியன வென்று இந்தப் பீரங்கிகளுக்கு அந்தப் பெயர் கொடுக்கப்பட்டது இந்தப் பீரங்கிகளால் அடிக்கடி செர்மனியர் டன்கிர்க்கில் சுடுகின்றன ரென்று தெரிகின்றது ஆயினும் கெய்ஸர் கருதியபடி மேற்படி பீரங்கிகளைக் கலேயில் கொண்டு போய்; இங்கிலாந்தைத் தாக்க யோசனை முடியவில்லை.

சண்டையின் ஒரு மணிகால செலவு—இப்போது நடைபெறும் சண்டையில் ஒருமணி நேரத்திற்கு 400,000 பவுன் செலவாகின்றதாம்.

யுத்தத்தின் காலஅளவு ஜெர்மானியரின் மதிப்பு—சேர்மன் உத்தியோகஸ்தர்கள் இப்போது நடைபெற்றுவரும் மிக்கொடிய யுத்தம் இன்னும் ஒருவருஷகாலஅளவு நடைபெறுமென்று தீர்மானித்திருக்கின்றனராம் அதற்கு வேண்டிய பிரயத்தனங்களையும் செய்து வருகின்றனராம்.

ஒரு பிரமாண்டமான ஸெப்ளின்—செர்மனியர் ஒருபிரமாண்டமான ஸெப்பிளின் ஆகாயக் கப்பலைச் சிருஷ்டித் திருக்கிறார்களாம் அதில் அநேக ஆயுதங்கள் ஏற்றப்படலாமாம், விஷவாயுவைத்துக் கொள்வதற்காக அதில் 3 பெரிய தொட்டிகள் அமைக்கப் பட்டிருக்கின்றனவாம் (அந்த விஷவாயுவை வெளியே விட்டால் ஆயிரக்கணக்கான சனங்கள் மாண மடைவார்கள்போலும்

இ-ப


தேவை! தேவை!

இங்கிலீசும் தமிழும் சுத்தமாயும் செவ்வையாகவும்வேலைதெரிந்தகொம்பசிற்றர் எமக்கு அவசியத் தேவையாயிருக்கிறது. விரும்புவோர் எமக்குத் தெரிவித்துக்கொள்ளலாம்

மனேஜர்

ஸ்ரீபாஸ்கரயந்திரசாலை

[தினந்தோறும்] [பிரசுரமாகும்]

# பாலபாஸ்கரன்

BALABHASKARA.

## ஜாதக பாஸ்கரன்.

இப்புத்தகம் சோதிடருடைய உதவியில்லாமல் கிரகங்களின் துவாதசபாவபலன்களும் அஷ்டவர்க்க தசவர்க்க கணித நிர்ணயங்களும், 9 கிரகங்களும் 12 ராசிகள்தோறும் சஞ்சரித்தலால் வரும் (108) வித ஸ்தான பலன்களும், ராசிப்பலன் நட்சத்திராதிபலன்களும், மகாதெசாபுத்திகளில்வரும் (81) வித பலன்களும், தத்து முதலியனவும், சதயோகமஞ்சரியிலுள்ள பல ராஜயோகங்களும் இன்னும் ஜாதகத்துக்குரிய பலவும் அமைந்திருத்தலோடு எவர்களும் தாமாகவே ஜாதகம் கணிக்கவும், ஜாதகபலனை அறியவும் கூடியவிதமாக (சமஸ்கிருதம் தமிழ் என்னும் இருபாஷைகளிலுமிருந்து) தமிழிலே வசனரூபமாக எழுதப்பட்டுள்ளது. இப்புத்தகத்திலே நவக்கிரகங்களைக் கணிப்பதற்குரிய கணித விதிகளும், அனுபவத்துக்காக இருஷிகள் அரசர்கள் விசேஷ உத்தியோகஸ்தர் முதலிய பலருடைய ஜாதகங்களும் சேர்க்கப்பட்டுள்ளது. ஆதலால் இப்புத்தகம் யாவரிடத்திலும் இருக்கவேண்டியது.

விலை ரூ. 3-50.

---

விதானமாலை என்னும்

## சோதிடப்புத்தகம் (உரையுடன்)

இதிலே அநேக விஷயங்கள் எவர்களுக்கும் தெளிவாக விளங்கும்படியுள்ள விரிவுரையுடன் விலை ரூ. 1-25.

---

## செகராஜசேகரம் (உரையுடன்)

யாழ்ப்பாணத்து (முன்) அரசரும் சிறந்த வித்துவானுமாகிய அரசராலே இயற்றுவிக்கப்பட்ட சோதிடநூல் யாழ்ப்பாணச் சரித்திரத்துடன் ... விலை சதம் 75.

---

## மனை நூல்.

மனை வகுத்தற்குரிய 16 பொருத்தங்களும், மனைவகுக்கவேண்டிய விதங்களும், அதற்குரிய நாளாதியனவும் எவர்களும் அறியும் விதமாக வசனரூபமாக உள்ளது.

விலை சதம் 25.

---

## அகபஞ்சஷஷ்டி.

செனனமரணத்தால் வரும் ஆசௌசம் இன்னார் இன்னாருக்கு எவ்வளவுகால எல்லைவரையும் இருக்குமென்பதைத் தெளிவாக வரையறுத்துக்கூறுவது, சமஸ்கிருதசுலோகமும் தமிழுரையும் ... ... விலை சதம் 50.

---

சிராத்தவிதி வசனமாக ... ... விலை சதம் 12.

---

மானேஜர்,
ஸ்ரீ பாஸ்கரயந்திரசாலை,
யாழ்ப்பாணம்,
Vannarponni Post, (JAFFNA.)

---

இதனருகாமையில் வகுக்கப்பட்டிருக்கும் இடம் விளம்பரங்களுக்காக விடப்பட்டமையால் வேண்டியவாநள் ஒன்றரைரூபாவீதம் முற்பணமாகக்கொடுத்து ஒருமாசத்துக்கு உபயோகிக்கலாம். மற்றைய விதங்களை நேரேபேசி ஒழுங்கு செய்து கொள்ளலாம ஒருகலத்துக்கு ரூபா 10. ஒரு பக்கத்துக்கு ரூபா 18 இரண்டு பேச்சுக்கு ரூபா 32. ஒருமுறைக்கு சிறுநோட்டிஸ்களை பத்திரிகையோடு சேர்த்தனுப்ப ரூபா 3 நோட்டிஸ்களை அடிக்கும்சாட்ஜ் பிரத்தியேகம்.

மானேஜர்.

---

Printed and published by V. S. Sripaty at the Sribhaskarapress Jaffna